வ.உ.சிதம்பரனார் துறைமுகப் பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
**V.O.Chidambaranar Port Trust**
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin - 628 004
Tamilnadu
Public Relations Office

Tele Fax : 0461 - 2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

Press Release No: 13 date: 26.10.2021

**VOC Port observes Vigilance Awareness Week from 26th October to 1st November 2021**

Today on 26.10.2021, Shri T.K. Ramachandran, IAS, Chairman, V.O. Chidambaranar Port Trust, administered the Vigilance Integrity Pledge to the Senior Officers of the Port. Shri Bimal Kumar Jha, Deputy Chairman and Heads of the Departments also took pledge on the occasion.

V.O. Chidambaranar Port Trust, Tuticorin, is observing ‘Vigilance Awareness Week’ from 26th October to 1st November 2021, under the theme ‘Independent India @ 75: Self Reliance with Integrity’ as per direction of the Central Vigilance Commission (CVC), Government of India.

In a move towards commemorating 75 years of India's Independence, Central Vigilance Commission, as the apex anti-corruption body in the Country, reaffirms its resolve to fight corruption and ensure integrity in Public life in the era of a self-reliant India.

The Central Vigilance Commission aims to promote integrity, transparency and accountability in Public life. As a part of its efforts to promote probity in public life and to achieve a corruption free society, different programmes are being organized by the Port for creating awareness among the Port users, stakeholders, public, employees and School / College students, highlighting the evils of corruption and its impact on Society.

During the week-long observance of ‘Vigilance Awareness’ from 26th October to 1st November 2021, various activities like grievance redressal programme for vendors & Contractors, Sensitization programmes and various competitions among officers, staff and College / School students will be conducted, in sync with the theme of the year 2021. These activities will sensitize and motivate the officers and staff to remain vigilant and transparent in their work to eradicate corruption from all spheres of life.

The above details were furnished in a Press Release by V. O. Chidambaranar Port Trust today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுகப் பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
**V.O.Chidambaranar Port Trust**
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin - 628 004
Tamilnadu
Public Relations Office

Tele Fax : 0461 - 2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

மக்கள் தொடர்பு அலுவலகம்

பத்திரிக்கைச் செய்தி எண் :13 தேதி :26.10.2021

**வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் கண்காணிப்பு வார விழா- 2021**
**26 அக்டோபர் 2021 முதல் 1 நவம்பர் 2021 வரை அனுசரிக்கப்படுகிறது**

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத்தில் 26.10.2021 இன்று திரு. தா.கி. ராமச்சந்திரன்,இ.ஆ.ப, தலைவர், வ.உ.சிதம்பரனார் பொறுப்புக் கழகம் அவர்கள் கண்காணிப்பு வார உறுதி மொழியினை முன்மொழிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் உறுதி மொழியினை எடுத்து கொண்டனர். திரு பிமல்குமார் ஜா, துணைத் தலைவர் மற்றும் அனைத்து துறைத் தலைவர்களும் உறுதி மொழியினை எடுத்து கொண்டார்கள்.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் கண்காணிப்பு வார விழா மத்திய கண்காணிப்பு ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி 2021 அக்டோபர் 26 முதல் நவம்பர் 1 வரை, ‘சுதந்திர இந்தியா @ 75 : நாணயத்துடன் சுயசார்பு’ (‘Independent India @ 75: Self Reliance with Integrity’) என்ற நோக்கத்துடன் அனுசரிக்கப்படுகிறது.

சுதந்திர இந்தியாவின் 75 வருட கால சுதந்திரத்தை கொண்டாடும் இத்தருணத்தில் தேசத்தின் லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு துறையின் முதன்மை அங்கமாக வீற்றிருக்கும் மத்திய கண்காணிப்பு ஆணையம் ஊழலை எதிர்த்து போராடும் வகையிலும், பொதுவாழ்வில் நேர்மையை உறுதிப்படுத்தும் வகையிலும் ஒரு சுயசார்பு பாரதத்தை புதிய சகாப்தமாக உருவாக்க மீண்டும் தன்னை அற்பணித்துக் கொண்டிருக்கிறது.

மத்திய கண்காணிப்பு ஆணையமானது பொதுவாழ்வில் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் சமூக பொறுப்பு ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கத்தில் செயல்பட்டு வருகிறது. ஊழல் அற்ற நாடு மற்றும் சமூதாயத்தை உருவாக்கவும், பொது வாழ்வில் நன்னடத்தையை ஊக்குவிக்கும் வகையிலும் பல்வேறு நிகழ்வுகள் வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத்தில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வுகள் துறைமுக பயனாளிகள், உபயோகிப்பாளர்கள், ஊழியர்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இடையே ஊழலின் தீமையை வலியுறுத்துவதற்கும், சமூகத்தின் மீதான அதன் தாக்கத்தை உணர்த்தும் வகையிலும், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் நடைபெற உள்ளது.

இந்த ஊழல் விழிப்புணர்வு வார விழாவில் துறைமுக ஒப்பந்ததாரர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு குறை தீர்க்கும் நிகழ்ச்சி, அதிகாரிகள், ஊழியர்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறுப் போட்டிகள் நடைபெற உள்ளன. இந்த நிகழ்வுகள் துறைமுக அதிகாரிகள், ஊழியர்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இடையே ஊழலை பற்றிய விழிப்புணர்வையும், வெளிப்படைத்தன்மையையும் ஏற்படுத்தும் வேளையில் ஊழலை எல்லாவகையிலும் ஒழிக்கவும் உதவும்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி